சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.127/2022

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 06 ம் நாள் வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொன்னுசாமி | வயது | 47 |
| க/பெ | முருகன் | வட்டம் | மேட்டுபாளையம் |
| விலாசம் | சிட்டேபாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | தொழில் | தனியார் நிறுவன ஊழியர் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

செட்டி என்ற செட்டி வளையன் எந்த வருடம், மாதம் இறந்தார் என்றால் 1955 ம் இறந்தார். தேதி, மாதம் தெரியாது. 1955 ம் ஆண்டு தான் செட்டி வளையன் இறந்தார் என்று காட்ட அவரது இறப்பு சான்றிதழ் எதுவும் பார்த்தேனா என்றால் இல்லை. அவரது இறப்பு பற்றி வாதி ஆறுமுகம் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரி தான். செட்டி வளையனுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 4 பெண் மகள்களும், 2 ஆண் மகன்களும். செட்டி வளையனின் வாரிசு சான்றிதழ் எதுவும் பார்த்து உள்ளேனா என்றால் இல்லை. அவருடைய வாரிசுகள் விவரமும் எனக்கு வாதி சொல்லி தான் தெரியும் என்றால் சரி தான். செட்டி வளையனின் 6 வாரிசுகளில் எல்லோரும் உயிருடன் தான் இருக்கிறார்கள். தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண். 958/2 ஆகும். அதன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 1.50 ஏக்கர். புல எண்.958/2 ன் மொத்த விஸ்தீரணம் 1.50 ஏக்கர் மட்டும் தானா அதற்கு மேல் இருந்ததா என்றால் 1.50 ஏக்கர் மட்டும் தான் இருக்கும். செட்டி வளையனுக்கு வேறு பூமியும் இருந்ததா என்றால் அதே

ஊரில் வேறு பூமியும் இருந்தது. ஆனால் அதன் புல எண் உள்ளிட்ட விவரங்கள் எனக்கு தெரியாது. அந்த நிலங்கள் தற்போதும் செட்டி வளையன் குடும்பத்தின் வசம் உள்ளதா என்றால் அவரது 2 மகன்களும் பாகம் செய்து கொண்டார்கள். செட்டி வளையன் இறந்த பின்னர் தான் அவரது மகன்கள் பாகம் செய்து கொண்டார்கள். செட்டி வளையன் உயிருடன் இருந்த போது தாவா சொத்தில் என்ன பயிர் செய்து வந்தார் என்றால் சோளம், கம்பு ஆகியவை பயிர் செய்து வந்தார். தாவா சொத்தில் செட்டி வளையன் உயிருடன் இருந்த போது போர், மின் இணைப்பு இருந்ததா என்றால் எதுவும் இல்லை. செட்டி வளையனின் மகன்கள் பாகம் செய்து கொண்ட ஆவணத்தை பார்த்து உள்ளேனா என்றால் பார்த்து உள்ளேன். என்ன பத்திரம் என்றால் பாக சாசன பத்திரம். அந்த பத்திரம் எந்த வருடம் எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த பாக பத்திரத்தில் யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்றால் தெரியாது. அந்த பாகம் பற்றிய விவரம் ஆறுமுகம் சொல்லி தான் தெரியும் என்றால் எனது அப்பாவும் சொல்லி உள்ளார். வாதியும் சொல்லி உள்ளார். தாவா சொத்து மழை பெய்தால் பயிர் வைக்கும் மானாவரி பூமி என்றால் சரி தான். தாவா சொத்தில் மானாவரி பயிர்கள் தான் செய்ய முடியும் என்றால் சரி தான். அது போன்ற பூமியில் இருந்து வரக் கூடிய வருமானம் மிகவும் குறைவாகத் தான் இருக்கும் என்றால் சரி தான். செட்டி வளையன் இறந்த பின்னர் அந்த பூமியை அவரது மனைவி தான் பார்த்து வந்தார் என்றால் சரி தான். செட்டி வளையன் இறக்கும் போது அவரது பிள்ளைகள் யாருக்கும் திருமணம் ஆகவில்லை என்றால் சரி தான். செட்டி வளையனின் மனைவி காளியம்மாள் தாவா சொத்தில் இருந்து வந்த வருமானத்தை வைத்து தான் குடும்பத்தை காப்பாற்றி வந்தார் என்றால் மற்ற சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தை வைத்தும் காப்பாற்றி வந்தார். மற்ற சொத்துக்கள் எவ்வளவு என்றால் தெரியாது. செட்டி வளையன் விவசாயம் செய்து வந்த போது தாவா சொத்தில் எவ்வளவு

வருமான வந்தது என்றால் தெரியாது. அவர் இறந்த பின்பு அவரது மனைவி காளியம்மாள் விவசாயம் செய்து வந்த போது அவருக்கு எவ்வளவு வருமானம் வந்தது என்றால் தெரியாது. காளியம்மாள் அவரது பிள்ளைகளை அவர் தான் காப்பாற்றி வந்தார் என்றால் காளியம்மாளும், அவரது பெற்றோர்களும் சேர்ந்து தான் காப்பாற்றி வந்தார்கள். காளியம்மாளுக்கு மட்டும் பிள்ளைகளை காப்பாற்ற போதிய வருமானம் இல்லாததால் தான் அவரது பெற்றோர்களுடன் சேர்ந்து காப்பாற்றி வந்தார் என்றால் சரி தான். அவரது பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைக்கும் அளவுக்கு காளியம்மாளுக்கு வசதி இல்லை என்றாலும் சரி தான். கடன் வாங்கியோ, சொத்தை விற்றோ தான் பிள்ளைகளை படிக்க வைக்க முடியும் என்றால் சரி தான். அவ்வாறு பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்து கொடுக்க வேண்டும் என்பதால் தான் தாவா சொத்தை விற்பனை செய்தார் என்றால் சரி தான். காளியம்மாள் உயிருடன் இருக்கும் வரை எத்தனை பேருக்கு திருமணம் நடந்தது என்றால் காளியம்மாளின் 6 பிள்ளைகளுக்கும் திருமணம் முடிந்து விட்டது. காளியம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் சரியாக நினைவில்லை. என்னுடைய பிறந்த தேதி என்ன என்றால் 15.07.1976 ஆகும். நான் பிறக்கும் முன்பு வரை செட்டி வளையன் குடும்பத்தில் நடந்த விவரங்கள் எனக்கு நேரில் தெரியாது என்றால் சரி தான். கேள்வி பட்டு தெரிந்து கொண்டேன். 1976 க்கு முன்பு நடந்த விவரங்களை வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் வாதியும், எனது அப்பாவும் சொல்லி தெரியும். நான் எந்த வருடம் தாவா சொத்தை பார்த்தேன் என்றால் 2012 ம் ஆண்டில் தான் முதன் முதலாக பூமியை பார்த்தேன். தற்போது தினமும் பார்ப்பேன். 2012 ம் ஆண்டிற்கு முன்னர் தாவா சொத்து எவ்வாறு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான். 2012 க்கு முன்னர் தாவா சொத்தில் என்ன அபிவிருத்தி செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரி தான். தற்போது என்ன அபிவிருத்திகள் செய்து உள்ளார்கள் என்று

தெரியுமா என்றால் போர் போட்டு உள்ளார்கள். சிறிய வீடு கட்டி உள்ளார்கள். பூமியை சுற்றியும் வேலி அமைத்து உள்ளார்கள் என்றால் சரி தான். போருக்கும், வீட்டிற்கும் மின் இணைப்பு பெற்று உள்ளார்கள் என்றால் சரி தான். 2012 ன் ஆண்டில் நான் முதன் முதலில் பார்த்த போது தாவா சொத்தில் போர் போடப்படவில்லை என்றும், வீடு கட்டப்படவில்லை என்றும், மின் இணைப்பு பெறப்படவில்லை என்றால் சரி தான். போர் போட்டதும், வீடு கட்டியதும், மின் இணைப்பு பெற்றதும் எந்த வருடம் என்றால் 2013 க்கு பின்னர் தான். தாவா சொத்தில் போர் போட்டு, வீடு கட்டி, மின் இணைப்பு பெறும் போது நாங்கள் யாராவது ஆட்சேபணை செய்தோமா என்றால் வாதி ஆட்சேபணை செய்தார். அதற்கு ஆட்சேபணை தெரிவித்து மின்சார வாரியத்திற்கோ, காவல் நிலையத்திற்கோ புகார் அளித்து உள்ளோமா என்றால் இல்லை. பஞ்சாயத்திற்கும், கட்டிட அனுமதி வழங்கக் கூடாது என ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரி தான். கம்பி வேலி அமைக்கும் போதும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரி தான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா.கெங்காராஜ்
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.